7 CCE PR/NSR & NSPR(D)/900/7846

ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 12 ]

Total No. of Printed Pages : 12 ]

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 48 ]

Total No. of Questions : 48 ]

ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : **85-T**

**Code No. : 85-T**

**D**

**CCE PR**
**UNREVISED**
**REDUCED SYLLABUS**
**NSR & NSPR**

**Question Paper Serial No. 900**

# ವಿಷಯ : ಸಮಾಜ ವಿಜ್ಞಾನ

# Subject : SOCIAL SCIENCE (சமூக அறிவியல்)

**( ತಮಿಳು ಮಾಧ್ಯಮ / Tamil Medium )**

**(ಪುನರಾವರ್ತಿತ ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ / ಎನ್.ಎಸ್.ಆರ್. & ಎನ್.ಎಸ್.ಪಿ.ಆರ್.)**

**(Private Repeater / NSR & NSPR)**

ದಿನಾಂಕ : 15. 04. 2023 ] [ Date : 15. 04. 2023

ಸಮಯ : ಬೆಳಗ್ಗೆ 10-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ–1-45 ರವರೆಗೆ ]

[ Time : 10-30 A.M. to 1-45 P.M.

ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 100 ] [ Max. Marks : 100

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் புறவய மற்றும் அகவய வகை (Objective and Subjective) வினாக்கள் 48-ஐ கொண்டுள்ளது.
2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது (Sealed by reverse jacket). நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும்பொழுது வலக்கைப் பக்க ஓரத்தை பிரித்து திறக்க வேண்டும். வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும் பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.
3. புறவய மற்றும் அகவய வகை வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றவும்.
4. வலக்கைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
5. மாணவர்கள் விடைகளை எழுதுவதற்கான அதிகபட்ச நேரம் வினாத்தாளின் மேற்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. மாணாக்கர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக ஒதுக்கப்பட்ட 15 நிமிடங்களையும் அது உள்ளடக்கியது.

[ Turn over

இங்கிருந்து பிரிக்கவும்

**TEAR HERE TO OPEN THE QUESTION PAPER**
இங்கு ஒட்டியுள்ள பகுதியைப் பிரித்துத் திறக்கவும்

**Tear here**

**I.** **பின்வரும் வினாக்கள்/மற்றும் முழுமைப்பெறாத கூற்றுகளுக்கு *நான்கு* மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையினை அதற்கென தரப்பட்டுள்ள இடத்தில் விடைக் குறியீட்டு எழுத்துடன் முழுவதுமாக எழுத வேண்டும் :**

**8 × 1 = 8**

1. துணைப்படை திட்டத்தை ஏற்றுக் கொண்ட முதல் சிற்றரசு மாநிலம்

   (A) அயோத்தி நவாப்

   (B) ஜுனாகத் நவாப்

   (C) ஹைதராபாத் நிஜாம்

   (D) குவாலியர் சிந்தியா

2. கோவா இந்திய யூனியனுடன் இணைக்கப்பட்டது

   (A) 1951 (B) 1961

   (C) 1953 (D) 1963

3. இந்தியாவின் முதல் பெண் குடியரசு தலைவர்

(A) இந்திரா காந்தி (B) பிரதிபா சிங் பாட்டீல்

(C) சுசிதா கிரிபாளனி (D) திரௌபதி முர்மு.

4. தீண்டாமை சாதி முறையில் ஒரு வெறுக்கதக்க வெளிப்பாடு என்று கூறியவர்

(A) மகாத்மா காந்திஜி (B) டாக்டர் பி.ஆர்.அம்பேத்கார்

(C) ஜோதிபா புலே (D) தயானந்த சரஸ்வதி.

5. ராஜேஷ் (25,000) இருபத்தி ஐயாயிரம் மதிப்புள்ள ஒரு (TV) தொலைக்காட்சி பெட்டியை விலைக்கு வாங்கினார். அது இரண்டு நாட்களில் உடைந்துவிட்டது. ஆனால் அக் கம்பெனி அந்த புகாரை ஏற்ற மறுத்தது. அதனால் அவர் எங்கு சென்று வழக்கு பதிவு செய்யலாம்.

(A) மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம்

(B) மாநில நுகர்வோர் ஆணையம்

(C) மாநில நுகர்வோர் ஆணையம்

(D) தாலுக்கா நுகர்வோர் நீதிமன்றம்

6. எல்லைச் சாலைகளை பராமரிப்பது மற்றும் நிர்வகிப்பது

(A) இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம்

(B) எல்லை பொதுப் பணிதுறை

(C) இந்திய எல்லை பாதுகாப்பு படை

(D) இந்திய எல்லை சாலைகள் ஆணையம்.

7. ஒரு நாட்டின் தேசிய வருமானத்தை மொத்த மக்கள் தொகையுடன் பிரித்து கொடுப்பது

(A) தனி நபர் வருமான வழங்கல்

(B) தனி நபர் வருமான இருப்பு

(C) தனி நபர் வருமான நுகர்வு

(D) தனி நபர் வருமானம்.

8. கைகா எதிர்ப்பு இயக்கத்தை தலைமை ஏற்று நடத்தியவர்

(A) சுந்தர்லால் பகுகுணா (B) சிவராம் காரந்த்

(C) மேத்தா பட்கர் (D) குசுமா சோரப்

**II. பின்வரும் வினாக்களுக்கு ஒரு வாக்கியத்தில் விடையளிக்கவும் :**

**8 × 1 = 8**

9. வெல்லெஸ்லி பிரபு துணைப்படை திட்டத்தை ஏன் அறிமுகப்படுத்தினார் ?

10. முதல் இந்திய சுதந்திரப் போருக்கான உடனடிக் காரணம் என்ன ?

11. வகுப்பு வாதம் என்றால் என்ன ?

12. சமுதாய படிநிலை முறை என்றால் என்ன ?

13. கால பைசாகீ என்றால் என்ன ?

14. மாங்குரோவ் காடுகள் இந்தியாவில் எங்கு காணப்படுகிறது ?

15. தேசிய வருமானம் என்றால் என்ன?

16. எந்த வங்கி கணக்கிலிருந்து சேவை வரிகட்டணத்தை வங்கிகள் வசூலிக்கிறது ?

**III. பின்வரும் வினாக்களுக்கு இரண்டிலிருந்து நான்கு வாக்கியங்கள் வரை விடையளிக்கவும் :** **18 × 2 = 36**

17. வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்க இந்திய அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன ?

**அல்லது**

இந்தியாவில் பயங்கரவாதத்தை (Terrorism) தடுக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?

18. சமுதாய படிநிலை முறைகளை உற்று நோக்கும் போது அனைத்து நாடுகளுக்கும் இவைகள் பொதுவானதாக இருந்ததில்லை என்பதை விவரிக்க.

**அல்லது**

கலவரங்களின் இயல்புகளை விளக்கவும்.

19. பிரிட்டிஸ் அரசு 1909 ஆண்டு கொண்டுவந்த இந்திய கவுன்சில் சட்டத்தை பயன்படுத்தி இந்தியாவில் பிரித்தாளும் முறையை கையாண்டன. இதை குறித்து நியாயப்படுத்துக.

20. முதல் இந்திய சுதந்திரப் போரினால் ஏற்பட்ட விளைவுகள் யாவை ?

21. இந்தியாவிற்கு நீர்பாசனம் ஏன் மிக அத்தியாவசியமானது ?

22. வெப்பமண்டல புயல்காற்றுகள் ஏன் அதிக அழிவுகளை ஏற்படுத்துகிறது ?

23. பின்தங்கிய நாடுகளின் பண்புகள் யாவை ?

24. நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் முக்கிய நோக்கங்கள யாவை ?

25. வாரிசு இழப்பு கொள்கையின் மூலம் இணைக்கப்பட்ட சிற்றரசு மாகாணங்களின் பெயர்களை கூறுக.

26. மூன்றாம் ஆங்கிலேய மைசூரு போரின் விளைவுகள் யாவை ?

27. டாக்டர் அன்னிபெசன்ட் சமூக சீர்திருத்தத்திற்கு ஆற்றிய பங்களிப்புக்கள் என்ன ?

28. இந்தியாவில் குறைவான மனிதவளர்ச்சி காட்டிகள் இருப்பதற்கான காரணம் என்ன ?

29. வெளிநாட்டுக் கொள்கை நாடுகளின் முன்னேற்றத்திற்கு எவ்வாறு உதவுகிறது ?

30. ஊதியம் பெற்ற மற்றும் ஊதியம் பெறாத பணியாளர்களுக்கு இடையே காணப்படும் வேறுபாடுகள் யாவை ?

31. கடற்கரைச் சமவெளிகளின் பொருளாதார முக்கியத்துவம் என்ன?

32. ஓரிடத்தில் அலுமினிய தொழிற்சாலைகள் அமைவதற்கான காரணிகள் யாவை ?

33. கிராமங்களின் வளர்ச்சியே நாட்டினுடைய வளர்ச்சி என்பதை விவரிக்கவும்.

34. பல்வேறு வங்கிகணக்கு முறைகளை பட்டியலிடுக.

**IV. பின்வரும் வினாக்களுக்கு ஆறு வாக்கியங்கள்/வரிகளில் விடையளிக்கவும் :** **$9 \times 3 = 27$**

35. பிரிட்டிஸாருக்கு எதிராக ஹலகலி வேடர்களின் கிளர்ச்சியினை விவரிக்கவும்.

36. பக்சார் போரின் விளைவுகள் யாவை ?

37. பிரார்த்தனை சமாஜத்தின் நோக்கங்கள் யாவை ?

**அல்லது**

மிதவாதிகள் பிரிட்டிஷ் அரசின் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள் யாவை ?

38. மனித உரிமைகளை நிலைநாட்ட இந்தியா எவ்வாறு போராடி வருகிறது ?

39. முறைப்படுத்தபடாத பிரிவு பணியாளர்கள் சந்திக்கும் பிரச்சனைகளை பட்டியலிடுக.

40. மண்ணரிப்பு பல பிரச்சனைகளுக்கு வழிவகுக்கிறது. நியாயப்படுத்துக.

41. இந்தியாவின் கிழக்கு கடற்கரையில் காணப்படும் முக்கிய துறைமுகங்களை பட்டியலிடுக.

**அல்லது**

நிலநடுக்கத்தை தடுக்க எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பட்டியலிடுக.

42. பெண்களுக்கு அதிகாரமளித்தலுக்கு சுய உதவி குழுக்கள் ஆதரவாக உள்ளது என்பதை நியாயப்படுத்துக.

**அல்லது**

கிராமப்புற முன்னேற்றத்திற்கு பெண்கள் பெரும் பங்காற்றுகின்றனர். நியாயப்படுத்துக.

43. தொழில் முனைவோரின் முக்கிய குணநலன்களை குறிப்பிடுக.

**அல்லது**

நுகர்வோருக்கு வங்கிகள் அளிக்கும் பல்வேறு சேவைகளை விவரிக்கவும்.

**V.** **பின்வரும் வினாக்களுக்கு எட்டு வாக்கியங்கள்/வரிகளில் விடையளிக்கவும் :** **4 × 4 = 16**

44. பிற பகுதிகளை ஒப்பிடுகையில் இந்திய ஒன்றியத்துடன் காஷ்மீர் இணைப்பு ஒரு தனித்தன்மை வாய்ந்ததாகும். எவாவாறு? இது குறித்து விவரிக்கவும்.

45. இந்தியா மற்றும் சீனா நாடுகளிடையே இன்றைய நாட்களில் சமூகமான உறவுகள் இல்லை ஏன் ?

46. இந்திய பொருளாதாரத்தில் வேளாண்மை ஒரு முக்கியமான பங்கை ஆற்றுகிறது. நியாயப்படுத்துக.

47. 1857 ஆம் ஆண்டு முதல் இந்திய சுதந்திர போருக்கான அரசியல் மற்றும் பொருளாதார காரணங்களை விவரிக்கவும்.

**அல்லது**

ஜாலியன் வாலாபாக் படுகொலையை பற்றி விவரிக்கவும்.

**VI.** 48. **இந்திய திரைப்படம் வரைந்து பின்வரும் இடங்களைக் குறிப்பிடுக :** **1 + 4 = 5**

a) 82½° கிழக்கு தீர்க்க ரேகை

b) கொச்சி

c) விசாகப்பட்டணம்

d) கொய்னா.

***பார்வைத் திறன் அற்றோருக்கான வினா :*** **(விடை எண் 48 க்கான மாற்று வினா)** **5**

பல்நோக்கு ஆற்று பள்ளதாக்கு அணைக்கட்டு திட்டங்களின் முக்கிய நோக்கங்கள் யாவை ?